SAMSUNG

# தமிழ்நாட்டில் பதினைந்து சாம்சங் ஸ்மார்ட் சுகாதார மையங்கள் முதலமைச்சர் திரு. பழனிச்சாமி அவர்களால் துவங்கி வைக்கப்பட்டது

*மாநிலமெங்கும் அரசு மருத்துவமனைகளில் டிஜிட்டல் எக்ஸ்-ரே மற்றும் டிஜிட்டல் அல்ட்ரா சவுண்டு போன்ற புத்தாக்கமான சாம்சங் சுகாதார உபகரணங்களை முயற்சி வழங்குகிறது*

**கோயம்புத்தூர், இந்தியா – பிப்ரவரி 18, 2018 -** சாம்சங் இந்தியா தமிழ்நாடு அரசுடன் மாநிலமெங்கும் புதிய சாம்சங் ஸ்மார்ட் சுகாதார நிலையங்களை சேர்ப்பதற்காகவும் பொருளாதார ரீதியாகவும் சமூகத்தில் பலவீனமாகவும் உள்ள சமூகத்தைச் சார்ந்த நோயாளிகளுக்கு விலை கொடுக்கத்தக்க மற்றும் தரமான சுகாதாரப் பராமரிப்பினை வழங்குவதற்காகவும் கூட்டணி அமைத்துள்ளது.

அதன் ஸ்மார்ட் ஹெல்த்கேர் திட்டத்தின் ஒரு பகுதியாக, சாம்சங் எல்ஈடி டிவி, சாம்சங் ஏர் கண்டிஷனர், மற்றும் ரெஃப்ரிஜிரெட்டர்களுடன் நிறுவனத்தால் உற்பத்தி செய்யப்படும் டிஜிட்டல் அல்ட்ரா சவுண்டு மற்றும் டிஜிட்டல் எக்ஸ்ரே இயந்திரங்கள் போன்ற நவீன மற்றும் புத்தாக்கமான சுகாதார உபகரணங்களை சாம்சங் வழங்கும்.

சாம்சங் இந்தியா மற்றும் மருத்துவம், சுகாதாரம் மற்றும் தமிழ்நாடு அரசின், மருத்துவம், சுகாதாரம் மற்றும் குடும்பநலத் துறைக்கிடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) நவம்பர் 2017ல் கையெழுத்தானது. இன்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி அவர்கள் சேலம் மாவட்டம் எடப்பாடி அரசு மருத்துவமனையில் சுகாதார மையத்தினைத் துவங்கி வைப்பதன் மூலம் மாநிலமெங்கும் 15 சாம்சங் ஸ்மார்ட் சுகாதார மையங்களை துவங்கி வைத்தார் டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாநில சுகாதாரம் மற்றும் குடும்பநலத் துறை அமைச்சர், மற்றும் திரு. எம்.சி. சம்பத், தமிழ்நாடு அரசின் தொழில்துறை அமைச்சர் ஆகியோரும் துவக்கவிழாவில் கலந்து கொண்டனர்.

**திரு எடப்பாடி கே. பழனிச்சாமி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்,** பேசுகையில், *“சுகாதாரத் தறையில் வளர்ச்சி இன்றையப் பொழுதின் தேவையாகும். சாம்சங் ஸ்மார்ட் ஹெல்த்கேர் முயற்சியுடன் தரமான சுகாதாரப் பராமரிப்ன் தேவையை நிறைவு செய்வதற்கு உதவுவதற்காக சாம்சங் இந்தியாவில் இருந்தான ஆதரவினை நாங்கள் வரவேற்கிறோம். பொதுமக்களுக்கு சிறப்பான மருத்துவ வசதிகளை உருவாக்குவதில் எங்களின் அரசாங்கம் பணி புரிந்து வருகிறது மற்றும் ஸ்மார்ட் ஹெல்த்கேர் திட்டத்திற்கான இந்த ஒத்துழைப்பு இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு நீண்டகாலம் பயணிக்கும்.”*

*“சமூகங்களை மாற்றுவதிலும் மக்களுக்கு சிறப்பான வாழக்கையை உருவாக்குவதிலும் சாம்சங் நம்பிக்கை கொண்டுள்ளது. ஆற்றல்மிக்கத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சுகாதாரத் தீர்வுகளை வழங்குவதற்காக தமிழ்நாடு அரசுடன் கூட்டணியமைப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இந்த ஒத்துழைப்பு மூலம், நவீன சுகாதார வசதிகளுக்கான எளிதான அணுகலை மாநிலத்திலும் அதன் அருகில் உள்ள பகுதிகளிலும் பெரும்பாலான மக்களுக்கு வழங்குவதற்காக நாங்கள் விரும்புகிறோம். சாம்சங் ஸ்மார்ட் ஹெல்த்கேர் நல்ல உள்கட்டமைப்பினையும், நவீன தொழில்நுட்பத்தையும் சிறந்த மருத்துவ நிபுணத்துவத்தையும் இணைத்திருக்கிறது”* என்கிறார் **திரு. தீபக் பரத்வாஜ், துணைத் தலைவர், சிஎஸ்ஆர், சாம்சங் இந்தியா.**

SAMSUNG

சுகாதாரத் துறையில், சாம்சங், மூன்றாம் நிலை, இரண்டாம் நிலை மற்றும் முதல்நிலை சுகாதாரத்திற்கான முழு மதிப்புத் தொடரிலும் சாம்சங் பணியாற்றுகிறது.

சாம்சங் ஸ்மார்ட் ஹெல்த்கேர் திட்டம் முதல் நிலை, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலைகளில் தரமான சுகாதாரத்திற்கான வரம்புமிக்க அணுகலைக் கொண்டிருக்கும் சமூகங்களுக்கு பயனளிக்கும் அரசாங்கத்தின் முற்சிக்கு ஆதரவளிப்பதை நோக்கமாக கொண்டுள்ளது.

சுகாதாரத் தலையீடு மற்றும் பன்மருத்துவ ஆய்வுகளுக்கான வசதியை ஏற்படுத்தும் சுகாதார டிஜிட்டல் அல்ட்ரா சவுண்டு, டிஜிட்டல் ரேடியாலஜி மற்றும் துணைப் பொருட்களுடன், 2015 முதல், சாம்சங் நாடெங்கிலும் 18 அரசாங்க மருத்துவமனைகளுடன் இணைந்து, வெவ்வேறு மாநிலங்களில் இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை சுகாதாரப் பராமரிப்பினை வழங்கி வருகிறது.

15 சாம்சங் ஸ்மார்ட் சுகாதார மையங்களுக்கான தமிழ்நாடு அரசுடனான கூட்டணி மாநிலத்தில் இரண்டாம் நிலை சுகாதார பராமரிப்பினை வழங்கும்.

முதன்மை அளவில், பொது சுகாதார நிலையங்களை ஆற்றலுடன் நிர்வகிப்பதற்கு உதவுவதற்காக கர்நாடக அரசுடன் சாம்சங் கூட்டணி ஏற்படுத்தியுளது. டிஜிட்டல் வடிவத்தில் தங்களின் தரவுதளத்தை உருவாக்குவதற்காக மாநலத்தில் பொது சுகாதார மையங்களில் 1000 சாம்சங் டேப் IRISகளை சாம்சங் வழங்கியுள்ளது. குடிமக்களின் மேம்பட்ட உடல்நலத்திற்காக முன்னெச்சரிக்கையாக தலையிடுவதற்கும், அதன் நலத்திட்டங்களை இன்னும் திறமையாகவும் இலக்கு வைத்து அரசாங்கத்திற்கு தகவல் அளிப்பதில் இந்த திட்டம் உதவுகிறது. டேப் IRIS ஆதார் மற்றும் KYC சரிபார்ப்புக்காக UIDAIஆல் ஒப்புதல் வழங்கப்பட்ட முதல் வணிக IRIS ஒருங்கிணைக்கப்பட்ட டேப்லெட் ஆகும்.

சமீபத்தில், தொற்றல்லாத நோய்களுக்காக (NCDS), நமது மக்கள் தொகையின் பெரும் பிரிவினர் குறிப்பாக, சாம்சங் இந்தியா மற்றும் அப்போலோ மருத்துவமனைகள் சாம்சங் அப்போலோ மொபைல் மெடிகல் கேர் யூனிட் திட்டத்தைக் கூட்டாக செயல்படுத்துவதற்காக ஒரு ஒத்துழைப்பில் கையொப்பமிட்டுள்ளன. மொபைல் மருத்துவ பராமரிப்பு யூனிட்கள் (பேருந்துகள்), ஈசிஜி, மனஅழுத்த பரிசோதனை, எக்கோகார்டியோகிராம், அல்ட்ராசவுண்டு, மாமோகிராம், பாப் ஸ்மியர் மற்றும் இரத்த மாதிரி சேமிப்பு உள்ளிட்ட பரிசோதனைத் தொழில்நுட்பங்களை முழுமையாக கொண்டிருக்கின்னறது, அது தமிழ்நாட்டிலும் உத்தரபிரதேசத்திலும் இயக்கப்படும்.

இது வரை, 3.5 இலட்சத்துக்கும் அதிகமான சமூகத்தின் பொருளாதார மற்றும் பின்தங்கிய பகுதிகளில் இருந்தான நோயாளிகள் இந்தியாவெங்கிலும் சாம்சங் ஸ்மார்ட் ஹெல்த்கேர் மையங்களால் நேர்மறையான தாக்கத்தைப் பெற்றுள்ளார்கள். மருத்துவர்கள், தொழில்நுட்பவியலாளர்கள் மற்றும் ரேடியாலஜிஸ்ட்கள் ஆகியோரும் நவீன நோயறிதல் உபகரணம் மற்றும் மென்பொருளைக் கையாள்வதற்கு பயிற்சியளிக்கப்பட்டுள்ளார்கள்.

**<u>சாம்சங் எலெக்ட்ரானிக்ஸ் கம். லிமிடெட் பற்றி</u>**

சாம்சங் உலகத்தை ஊக்குவிக்கிறது மற்றும் எதிர்காலத்தை வடிவமைக்க கருத்துக்கள் மற்றும் தொழில்நுட்பங்களை உருவாக்குகிறது. தொலைக்காட்சிப் பெட்டிகள், ஸ்மார்ட்போன்கள், மடிக்கணினி சாதனங்கள், டேப்லட்கள், டிஜிட்டல் உபகரணங்கள், நெட்வொர்க் அமைப்புகள் மற்றும் நினைவகம், கணினி LSI ஃபவுண்டரி மற்றும் LED தீர்வுகள் ஆகியவற்றின் உலகத்தை நிறுவனம் மறுவரையறை செய்கிறது. சாம்சங் இந்தியாவின் சமீபத்திய செய்திகளுக்கு, தயவுசெய்து சாம்சங் இந்தியா நியூஸ்ரூமுக்குச் செல்க http://news.samsung.com/in. இந்திக்கு சாம்சங் நியூஸ்ரூம் பாரத்தில் லாக் ஆன் செய்யவும் https://news.samsung.com/bharat. நீங்கள் ட்விட்டரில் @SamsungNewsIN ல் எங்களைப் பின்தொடரலாம்.

**மேலும் தகவலுக்கு தொடர்பு கொள்ளவும் :**

ரவி தேஜா ஷர்மா
சாம்சங் தென்மேற்கு ஆசியா
ஈமெயில்: raviteja.s@samsung.com

ரன்ஜினி சலாம்
ஆட்ஃபேக்டர்ஸ் பிஆர்
ஈமெயில்: ranjini.chalam@adfactorspr.com
போன்: +91-9910874088